*கவனிக்க.–2020.06.12 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II, பகுதி III மற்றும் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2181 - 2020 ජූනි මස 19 වැනි සිකුරාදා - 2020.06.19**

*2181 ஆம் இலக்கம் – 2020 ஆம் ஆண்டு யூன் மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) – பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | - |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | - |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | 526 |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | - |

| | பக்கம் |
|---|---|
| அரசாங்க அறிவித்தல்கள் | 527 |
| விலைக் கட்டளைகள் | - |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | - |
| இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | - |
| வரவு செலவுத் திரட்டுக்கள் | - |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 527 |
| மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்***. *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி–வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2020, யூலை மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2020, யூன் மாதம் 26 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும்

*2020 இன் இல. 223*

## நியமனங்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 55 (2) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் அமைச்சரவையினால் பின்வரும் இலங்கை நிருவாக சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் ஒவ்வொருவரினதும் பெயர்களின் எதிரே குறிப்பிடப்பட்டுள்ள திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக மாவட்டச் செயலாளர்/ அரசாங்க அதிபர் பதவிக்கு நியமனம் செய்யப்பட்டுள்ளார்களென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

| உத்தியோகத்தரின் பெயர் | நிருவாக மாவட்டம் | செயல்வலுவுக்கு வரும் திகதி |
|---|---|---|
| 1. திரு. டபிள்யூ. ஏ. தர்மசிறி | மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபர், பொலன்னறுவை நிருவாக மாவட்டம் | 2020.02.18 |
| 2. திரு. குணதாச சமரசிங்க | மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபர், மொணராகலை நிருவாக மாவட்டம் | 2020.02.27 |
| 3. திரு. டபிள்யூ. எச். கருணாரத்ன | மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபர், அம்பாந்தோட்டை நிருவாக மாவட்டம் | 2020.03.02 |
| 4. திரு. ஆர். எம். ஆர். ரத்நாயக்க | மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபர், குருநாகல் நிருவாக மாவட்டம் | 2020.03.02 |

அமைச்சரவையின் கட்டளைப்படி,

எஸ். அமரசேக்கர,
அமைச்சரவைச் செயலாளர்.

2020, மாச்சு 19.

6-157/1

---

*2020 இன் இல. 224*

## நியமனம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 55 (2) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் அமைச்சரவையினால் இலங்கை நிருவாக சேவையின் 1 ஆம் தரத்தைச் சேர்ந்த திரு. கே. கே. எஸ். அன்டன் பெரேரா அவர்கள், 2020, மாச்சு மாதம் 03 ஆந் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக பிரதம அமைச்சரின் அலுவலகத்தில் மேலதிகச் செயலாளர் பதவியில் பதில் கடமையாற்றுவதற்காக நியமனம் செய்யப்பட்டுள்ளாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அமைச்சரவையின் கட்டளைப்படி,

எஸ். அமரசேக்கர,
அமைச்சரவைச் செயலாளர்.

2020, மாச்சு 11.

6-157/2

# அரசாங்க அறிவித்தல்கள்

## காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு

*2002 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க நில அளவைகள் சட்டத்தின் 27 ஆம் பிரிவின் கீழ் நில அளவைகள் சபையின் உறுப்பினர்களை நியமித்தல்*

*2002 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க நில அளவைகள் சட்டத்தின் 27 (அ) ஆம் பிரிவின் கீழ் காணி அமைச்சரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் நில அளவைகள் சபையின் உறுப்பினர்களை நியமனம் செய்து 2017.03.31 ஆந் திகதிய வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில், 2019.06.01 ஆந் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள திருத்தம் மேற்கொள்ளப்படுகின்றது.*

(அ) உத்தியோகபூர்வ உறுப்பினர்களாகும் நபர்கள்

1. ஆரியரத்ன திஸாநாயக்க பணிப்பாளர், நில அளவைகள் மற்றும் வரைபடமாக்கல் நிறுவனம் - உறுப்பினர் - பணிப்பாளர், நில அளவைகள் மற்றும் வரைபடமாக்கல் நிறுவனத்தின் பதவியில் இருக்கும் காலம் வரை

கயந்த கருணாதிலக,
காணி மற்றும் பாராளுமன்ற
மறுசீரமைப்பு அமைச்சர்.

கொழும்பு,
*2019, யூன் 03.*
*6-110*

---

## ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈஸ்வரர் ஆலய வருடாந்த உற்சவம் - 2020

முல்லைத்தீவு மாவட்டம்

மேற்படி உற்சவம் *2020*, யூன் *19* ஆந் திகதி முற்பகல் 6.00 மணிக்கு ஆரம்பமாகி *2020*, யூலை *04* ஆந் திகதி பிற்பகல் 6.00 மணிக்கு முடிவடையும் என்பது பொதுமக்களின் கவனத்திற்கு கொண்டுவரப்படுகின்றது.

*2. 1949.05.27* ஆந் திகதியும் *9978* ஆம் இலக்கமும் கொண்ட அரசாங்க வர்த்தமானியிலும் *1950.05.26* ஆந் திகதியும் *10105* ஆம் இலக்கமும் கொண்ட அரசாங்க வர்த்தமானியிலும் பிசுரிக்கப்பட்ட கட்டளைகள் பொதுமக்கள் கவனத்திற்கு கொண்டுவரப்படுகின்றன.

*3.* மேற்கூறப்பட்ட கட்டளைகள் இவ் உற்சவத்தின் போது அமுல்படுத்தப்படும்.

க. விமலநாதன்,
மாவட்ட செயலாளர்/அரசாங்க அதிபர்,
மாவட்ட செயலகம் - முல்லைத்தீவு.

*2020, யூன் 10.*

*6-264*

---

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் பிரகாரம் நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2020, பெப்புருவரி 25 ஆந் திகதி அன்று கீழ்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-*

காரியவசம் ஹப்புதந்றிகே இந்திக்க அனுராத மற்றும் அஹன்கம பந்தரகே ஹிமாலிகா ஜீவந்தி

"பிணைப்படுத்தியவர்களாகிய காரியவசம் ஹப்புதந்றிகே இந்திக்க அனுராத மற்றும் அஹன்கம பந்தரகே ஹிமாலிகா ஜீவந்தி மற்றும் அடமானதாரராகிய அஹன்கம பந்தரகே ஹிமாலிகா ஜீவந்தி பிரசித்த நொத்தாரிசு கே. ஏ. ஏ. எம். ஆர். என். குலசேகரவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட *2017.07.28* ஆந் திகதிய 1080 ஆம் இலக்க ஈட்டுமுறி மூலம் இதனுடனுள்ள அட்டவணையில் மேலும் பூரணமாக விபரிக்கப்பட்டுள்ள ஆதனம் மற்றும் கட்டடங்கள், உரிமைகளை ஈடாக மற்றும் அடமானமாக இல. *242*, யூனியன் பிளேஸ், கொழும்பு-*2* ஐச் சேர்ந்த நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி பீஎல்சீ சார்பில் காரியவசம் ஹப்புதந்றிகே இந்திக்க அனுராத மற்றும் அஹன்கம பந்தரகே ஹிமாலிகா ஜீவந்தியினால் பெறப்பட்ட

நிதிவசதிகளின் உரிய மீள் கொடுப்பனவுக்கு பிணையாக வைத்துள்ளதாலும்,

மற்றும் குறிப்பிட்ட காரியவசம் ஹப்புதந்றிகே இந்திக்க அனுராத மற்றும் அஹன்கம பந்தரகே ஹிமாலிகா ஜீவந்தி குறித்த முறி மூலம் உத்தரவாதமளித்த வசதிகளின் மீதான செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவை செலுத்தத் தவறியுள்ளமையினாலும்,

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலம் அளிக்கப்பெற்ற தத்துவங்களின் கீழ் ஏழு மில்லியன் இருநூற்று நாற்பத்தெட்டாயிரத்து எழுநூற்றிப் பதினொரு ரூபா முப்பத்தொன்பது சதம் (ரூபா 7,248,711.39) தொகையையும் 2019.12.05 ஆந் திகதியன்று கடன் வசதியில் மூலதன நிலுவைத் தொகையாகவுள்ள ஆறு மில்லியன் எண்ணூற்றி பதினாறாயிரத்து நூற்றி இருபத்தொரு ரூபா ஐம்பத்திரெண்டு சதம் (ரூபா 6,816,121.52) தொகை மீது இணங்கப்பட்டபடி 2019.12.06 ஆந் திகதியிலிருந்து கூடுதலான வட்டியையும், உதவியாளர் செலவு, நியதிச்சட்டத் தீர்வைகள், விளம்பரச் செலவுகளைச் சேர்த்து மற்றும் அதன்பின் ஏற்பட்ட ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் (எவையேனுமிருப்பின்) அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக, கட்டடங்கள் உரிமைகளை கொழும்பு - 12, புதுக்கடை வீதி, இல. 200 ஐச் சேர்ந்த அனுமதிபெற்ற ஏலதாரர், திரு. எல். பி. சேனாநாயக்கவினால் பகிரங்க ஏலத்தில் விற்கப்பட வேண்டுமென்று இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.''.

### மேற்குறிப்பிட்ட அட்டவணை

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், பாணந்துறை தொட்டமுன, பாணந்துறை தல்பிற்றி தேபத்தவில் பண்டாரகம பிரதேச சபை எல்லைக்குள் பண்டாரகம பிரதேச செயலாளர் பிரிவில் இல. 690 மஹவில கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட மஹவில கிராமத்தில் அமைந்த நிலம், மரங்கள், கட்டடங்கள் மற்றும் அதில் எழுந்து நிற்கும் எல்லாம் சேர்த்து ''தெல்கஹவத்த'' என அழைக்கப்படும் காணியின் லொட்கள் A1 மற்றும் A2 இனுடைய லொட்கள் 1 மற்றும் 2 ஒன்றிணைக்கப்பட்ட காணிக்கு அனுமதி பெற்ற நில அளவையாளர் அனுர இளங்கோன் தயாரித்த 2008.09.05 ஆந் திகதிய 451 ஆம் இலக்க வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட லொட் A என அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. மற்றும் குறித்த லொட் A ஆனது - வடக்கு : 1918 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள லொட் 2 ; கிழக்கு : நில அளவையாளர் ஏ. எம். ஆர். ஜயசேகர தயாரித்த 1694 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள லொட் 3 ; தெற்கு: வரைபடம் 12866 இலுள்ள லொட் A6 (வீதி முடக்கு) மற்றும் மேற்கு : நெல் வயல் எல்லைகளைக் கொண்டுள்ளது. மற்றும் 451 ஆம் இலக்க வரைபடத்தின்படி முப்பத்தொன்பது பேர்ச் (0ஏ.0றூ.39பே.) விஸ்தீரணத்தையும் கொண்டது. மற்றும் பாணந்துறை காணிப் பதிவகத்தில் வொலியும்/ போலியோ F 609/25 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அதனோடு சேர்த்து அதனூடாக மற்றும் மேலாக கீழாக அணுகல் உரிமை மற்றும் ஏனைய சேவக உரிமைகள்:

(1) மஹவில கிராமத்தில் அமைந்த ''தெல்கஹவத்த'' என அழைக்கப்படும் காணியின் லொட் A காணிக்கு அனுமதி பெற்ற நிலஅளவையாளர் எல். டபிள்யூ. எல். டி. சில்வா தயாரித்த 1996.02.28 ஆந் திகதிய 12866 ஆம் இலக்க வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட லொட் A6 என அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. மற்றும் குறித்த லொட் A 6 ஆனது வடக்கு : இந்த வரைபடத்திலுள்ள லொட்கள் A1, A 2, A3, A4 மற்றும் A5 ; கிழக்கு : 1918 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள லொட் 10 ; தெற்கு : வரைபடம் 3869 இலுள்ள லொட் C (10 அடி அகல வீதி) மற்றும் மேற்கு : நெல் வயல் எல்லைகளைக் கொண்டுள்ளது. மற்றும் 12866 ஆம் இலக்க வரைபடத்தின்படி மூன்று பேர்ச் (0ஏ.0றூ.3பே.) விஸ்தீரணத்தையும் கொண்டது. மற்றும் பாணந்துறை காணிப்பதிவகத்தில் வொலியும்/ போலியோ F 561/ 176 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(2) மஹவில கிராமத்தில் அமைந்த ''தெல்கஹவத்த'' என அழைக்கப்படும் காணிக்கு அனுமதி பெற்ற நிலஅளவையாளர் பி. எல். டி. பர்ணாந்து தயாரித்த 1992.10.02 ஆந் திகதிய 3869 ஆம் இலக்க வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட லொட் C என அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. மற்றும் குறித்த லொட் C ஆனது வடக்கு : 3869 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள லொட் A ; கிழக்கு : உஸ்வத்தவை நோக்கிய வீதி ; தெற்கு : 3869 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள லொட் B மற்றும் மேற்கு : நெல் வயல் எல்லைகளைக் கொண்டுள்ளது. மற்றும் 3869 ஆம் இலக்க வரைபடத்தின்படி பத்து தசம் மூன்று பேர்ச் (0ஏ.0றூ. 10.3பே.) விஸ்தீரணத்தையும் கொண்டது. மற்றும் பாணந்துறை காணிப்பதிவகத்தில் வொலியும்/ போலியோ F 495/ 132 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

தேஜா சில்வா,
கம்பனிச் செயலாளர்.

242, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 2.

6-134

**நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் பிரகாரம் நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2020.02.25 ஆந் திகதி அன்று கீழ்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளமை இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-*

*ஜயவர்தன பட்டபந்திகே நிதோஷானி வாசனா குமாரி மற்றும் லால் கீர்த்தி அமரசிறி குணவர்தன*

*"பிணைப்படுத்தியவர்களாகிய ஜயவர்தன பட்டபந்திகே நிதோஷானி வாசனா குமாரி மற்றும் லால் கீர்த்தி அமரசிறி குணவர்தன மற்றும் அடமானதாரராகிய ஜயவர்தன பட்டபந்திகே நிதோஷானி வாசனா குமாரி பிரசித்த நொத்தாரிசு கே. ஏ. எம். ஆர். என். குலசேகரவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2016.08.16 ஆந் திகதிய 932 ஆம் இலக்க ஈட்டுமுறி மூலம் இதனுடனுள்ள அட்டவணையில் மேலும் பூரணமாக விபரிக்கப்பட்டுள்ள ஆதனம் மற்றும் கட்டடங்கள், உரிமைகளை ஈடாக மற்றும் அடமானமாக இல. 242, யூனியன் பிளேஸ், கொழும்பு-2 ஐச் சேர்ந்த நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி பீஎல்சீ சார்பில் ஜயவர்தன பட்டபந்திகே நிதோஷானி வாசனா குமாரி மற்றும் லால் கீர்த்தி அமரசிறி குணவர்தனவினால் பெறப்பட்ட நிதிவசதிகளின் உரிய மீள் கொடுப்பனவுக்கு பிணையாக வைத்துள்ளதாலும்,*

*மற்றும் குறிப்பிட்ட ஜயவர்தன பட்டபந்திகே நிதோஷானி வாசனா குமாரி மற்றும் லால் கீர்த்தி அமரசிறி குணவர்தன குறித்த முறி மூலம் உத்தரவாதமளித்த வசதிகளின் மீதான செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவை செலுத்தத் தவறியுள்ளமையினாலும்,*

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடும் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலம் அளிக்கப்பெற்ற தத்துவங்களின் கீழ் பதினான்கு மில்லியன் எண்ணூற்று எண்பத்து மூவாயிரத்து இருநூற்று முப்பத்தொன்பது ரூபா முப்பத்தொன்பது சதம் (ரூபா 14,883,239.39) தொகையையும் 2019.12.02 ஆந் திகதியன்று தவணைக் கடனில் மூலதன நிலுவைத் தொகையாகவுள்ள பன்னிரெண்டு மில்லியன் எழுநூற்றி முப்பத்தேழாயிரத்து இருநூற்றி எண்பத்தெட்டு ரூபா இருபது சதம் (ரூபா 12,737,288.20) தொகை மீது இணங்கப்பட்டபடி 2019.12.03 ஆந் திகதியிலிருந்து கூடுதலான வட்டியையும்,*

*உதவியாளர் செலவு, நியதிச்சட்டத் தீர்வைகள், விளம்பரச் செலவுகளைச் சேர்த்து மற்றும் அதன்பின் ஏற்பட்ட ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் (எவையேனுமிருப்பின்) அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக, கட்டடங்கள் உரிமைகளை கொழும்பு - 12, புதுக்கடை வீதி, இல. 200 ஐச் சேர்ந்த அனுமதிபெற்ற ஏலதாரர், திரு. எல். பி. சேனாநாயக்கவினால் பகிரங்க ஏலத்தில் விற்கப்பட வேண்டுமென்று இத்தால் தீர்மானிக்கப்படு கின்றது.".*

**மேற்குறிப்பிட்ட அட்டவணை**

*மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹேவாகம் கோரளை, பள்ளே பற்று கலல்கொட இல. 493, கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட மஹரகம பிரதேச செயலாளர் பிரிவில் மஹரகம நகரசபை எல்லைக்குள் ஹோகந்தர தெற்கில் அமைந்த "வெல்லங்கிரிய என அழைக்கப்படும் காணியின் ஒன்றிணைக்கப்பட்ட லொட் 1 மற்றும் லொட் 2 இன் உப பகுதியான காணிக்கு அனுமதி பெற்ற நில அளவையாளர் ஏ. ஹெற்றிகே தயாரித்த 1994, மாசி 03 ஆந் திகதிய 1630 ஆம் இலக்க வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட லொட் 7 என அடையாளப்படுத்தப்பட்டுள்ளது மற்றும் குறித்த லொட் 7 ஆனது - வடக்கு : நில அளவையாளர் ஏ. ஹெற்றிகே தயாரித்த 1619 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள அதே காணியின் லொட் 1 ; கிழக்கு: குறித்த வரைபடம் 1630 இலுள்ள லொட்கள் 6 மற்றும் 22 ; தெற்கு : குறித்த வரைபடம் 1630 இலுள்ள லொட் 8 மற்றும் மேற்கு: எச். பி. ரி. வீட்டுத்திட்டம் (அதே காணி) எல்லைகளைக் கொண்டுள்ளது. மற்றும் 1630 ஆம் இலக்க வரைபடத்தின்படி பன்னிரெண்டு தசம் இரண்டு ஐந்து பேர்ச் (0ஏ.0றூ.12.25பே.) விஸ்தீரணத்தையும் கொண்டது. மற்றும் ஹோமாகம காணிப்பதிவகத்தில் வொலியும்/போலியோ C 125/18 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.*

*அதனோடு சேர்த்து அதனூடாக மற்றும் மேலாக அனைத்து நபர்களுடனும் பொதுவான கால் மற்றும் வாகனப் போக்குவரத்துக்கான பாதை மற்றும் செல்வழி உரிமை, மற்றும் பாதை ஒதுக்கீடுகளினூடாக உள்ளே அல்லது கீழே மற்றும் அதனூடாக மேல்நிலை மற்றும் நிலத்தடியில் பிரதான மின்சார கம்பிவடம் வாயு மற்றும் பிரதான வடிகால் கழிநீர் குழாய்கள் எப்படிப்பட்ட மற்றும் எவ்வகையான மேற்குறிப்பிட்ட வசதிகளாயினும் இடுவதற்கான உரிமை.*

*அதாவது - நில அளவையாளர் ஏ. ஹெற்றிகே தயாரித்த 1994, மாசி 03 ஆந் திகதிய 1630 ஆம் இலக்க வரைபடத்தில் அடையாளப்படுத்தப்பட்ட லொட்கள் 13 மற்றும் 22 கீழே தரப் படுகின்றது:-*

(A) *ஹோகந்தர தெற்கில் அமைந்த "வெல்லங்கிரிய என அழைக்கப்படும் காணியின் ஒன்றிணைக்கப்பட்ட*

லொட் 1 மற்றும் லொட் 2 இன் உப பகுதியான காணிக்கு அனுமதி பெற்ற நிலஅளவையாளர் ஏ. ஹெற்றிகே தயாரித்த 1994, மாசி 03 ஆந் திகதிய 1630 ஆம் இலக்க வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட லொட் 13 (வீதி ஒதுக்கீடு 20 அடி அகலம்) என அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. மற்றும் குறித்த லொட் 7 ஆனது வடக்கு : நில அளவையாளர் ஏ. ஹெற்றிகே தயாரித்த 1630 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள அதே காணியின் லொட் 10 மற்றும் தர்மயதான வீதி ; கிழக்கு : குறித்த வரைபடம் 1630 இலுள்ள லொட்கள் 3, 4, 11 மற்றும் 12 ; தெற்கு: குறித்த வரைபடம் 1630 இலுள்ள லொட்கள் 12 மற்றும் 21 மற்றும் மேற்கு : லொட் 9, 10, 22, 5 மற்றும் 2 எல்லைகளைக் கொண்டுள்ளது. மற்றும் 1630 ஆம் இலக்க வரைபடத்தின்படி இருபத்தொன்று தசம் நான்கு பூச்சியம் பேர்ச் (0ஏ.0றூ.21.40பே.) விஸ்தீரணத்தையும் கொண்டது. மற்றும் ஹோமாகம காணிப்பதிவகத்தில் வொலியும்/போலியோ G 1727/ 237 இன் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

(B) ஹோகந்தர தெற்கில் அமைந்த "வெல்லங்கிரிய என அழைக்கப்படும் காணியின் ஒன்றிணைக்கப்பட்ட லொட் 1 மற்றும் லொட் 2 இன் உப பகுதியான காணிக்கு அனுமதி பெற்ற நிலஅளவையாளர் ஏ. ஹெற்றிகே தயாரித்த 1994, மாசி 03 ஆந் திகதிய 1630 ஆம் இலக்க வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட லொட் 22 (வீதி ஒதுக்கீடு 15 அடி அகலம்) என அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. மற்றும் குறித்த லொட் 7 ஆனது வடக்கு : நில அளவையாளர் ஏ. ஹெற்றிகே தயாரித்த 1630 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள அதே காணியின் லொட் 6 மற்றும் 5 ; கிழக்கு : குறித்த வரைபடம் 1630 இலுள்ள லொட் 13 ; தெற்கு: குறித்த வரைபடம் 1630 இலுள்ள லொட்கள் 10 மற்றும் 08 மற்றும் மேற்கு : லொட் 7 எல்லைகளைக் கொண்டுள்ளது. மற்றும் 1630 ஆம் இலக்க வரைபடத்தின்படி ஐந்து தசம் நான்கு ஐந்து பேர்ச் (0ஏ.0றூ.5.45பே.) விஸ்தீரணத்தையும் கொண்டது. மற்றும் ஹோமாகம காணிப்பதிவகத்தில் வொலியும்/ போலியோ G 1727/ 39 இன் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

தேஜா சில்வா,
கம்பனிச் செயலாளர்.

242, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 2.

6-135

---

### செலான் வங்கி பீ. எல்.சீ.

(2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்துக்கிணங்க PQ 9 குறிப்பீட்டின் கீழ் பதிவு செய்யப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டத்தாலும் கடன்களை மீள அறவிடுதல் ( விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் செலான் வங்கி பீ. எல்.சீ. பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

கிளை: வெளிநாட்டு நாணய வங்கி பிரிவு/அபிவிருத்தி வங்கி பிரிவு
கணக்கு இலக்கம்: 0860-041405 - 001

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் ( விசேட ஏற்பாடுகள் ) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ், வரையறுக்கப்பட்ட செலான் வங்கி பீ. எல்.சீ. பணிப்பாளர் சபையினால் 2020.05.26 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம் :-

"செலிங்கோ ஹோம்ஸ் இன்ரநாஷனல் (லோட்டஸ் டவர்) லிமிட்டட், என்ற நிறுவனம் 2007 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்ட இலக்கம் 07 இன் கீழ் முறையாக இணைக்கப்பட்டதும், பதிவு இலக்கம் PB 15 ஐ கொண்டதும், கொழும்பு 2 இல் பதிவு அலுவலகத்தைக் கொண்டதும், கடப்பாட்டாளர்/ அடகுவைத்தவர் ஆகவும் உள்ளதுடன் செலான் வங்கி பீ. எல். சி. (2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவுஇலக்கம் PQ9 இன் கீழ் பதிவு செய்யப்பட்டது) சார்பில் பிரசித்த நொத்தாரிசு எல். பீ. என். டீ. சில்வாவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2007, ஒகத்து மாதம் 27 ஆந் திகதியிடப்பட்ட 18 மற்றும் 2007, திசெம்பர் 27 ஆந் திகதியிடப்பட்ட 33 ஆம் இலக்க அடகு முறிகள் மற்றும் பிரசித்த நொத்தாரிசு ஜே. ஆர். புரக்கரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2008, சனவரி 29 ஆந் திகதியிடப்பட்ட 263, 2008, ஏப்பிறல் 04 திகதியிடப்பட்ட 277, 2008, ஒகத்து 15 ஆந் திகதியிடப்பட்ட 313 மற்றும் 2008, செத்தெம்பர் 24 ஆந் திகதியிடப்பட்ட 326 ஆகிய எல்லா அடகு முறிகளும், குறித்த அட்டவணைகளில் மேலதிகமாக விபரிக்கப்பட்டுள்ள அடகு வைக்கப்பட்ட ஆதனம், மற்றும் செயல்படும் நிறுவனங்களின் மறுமலர்ச்சி அல்லது 2011 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க பயன்பாட்டு ஆதன சட்டத்தின் கீழ், சொல்லப்பட்ட அடகு வைக்கப்பட்ட ஆதனத்தின் பகுதி இருநூற்றி பதினான்கு கோடியே அறுபத்து நான்கு இலட்சத்து பதினையாயிரத்து இருநூற்று முப்பத்தொன்பது ரூபா எண்பது சதம் (ரூபா 2,146,415,239.80) என்ற முதன்மை தொகையின் பகுதி, 2014. செத்தெம்பர் 30 ஆந் திகதி அன்று சொல்லப்பட்ட கடப்பாட்டாளர்/அடகுவைத்தவரிடம் இருந்து செலான் வங்கி பீ. எல். சீக்கு சேர்மதியாகவும், வருமதியாகவும் உள்ளது. முன் சொல்லப்பட்ட அடகு முறிகள் இன் கீழ் உள்ள மிகுதியான ஆதனத்தின் பகுதி சொல்லப்பட்ட கையகபடுத்தப்பட்டதன் பின்னர் வருமதியான கொடுப்பனவில் கடப்பாட்டாளர்/அடகுவைத்தவர் தவணை தவறியுள்ளார்.

அத்துடன், 2019, செத்தெம்பர் 30 ஆந் திகதியன்று உள்ளவாறாக, செலான் வங்கி பீ. எல். சீ. தாபனத்திற்கு

சொல்லப்பட்ட கையடக்கப்பட்டதன் பின்னர் வாங்கப்பட்டதன் பின்னர் பிரதான தொகையின் மேலும் தொகையான முப்பத்து ஏழு கோடியே எழுபத்து ஏழு இலட்சத்து எழுபத்து ஆறாயிரத்து நூற்று அறுபத்து மூன்று ரூபா ஐம்பத்து ஒரு சதம் (ரூபா 377,776,163.51) உடனான வட்டி அந்த சட்டத்தின் கீழ் கையகப்படுத்தப்பட்ட ஆதனத்தின், ஒரு பகுதிக்கான இழப்பீடாக நிர்ணயிக்கப்பட்ட தொகை, அத்துடன், செலான் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கி களினால் கடன்கள் மீள அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) திருத்தப்பட்ட சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ், இத்துடனான அட்டவணையில் மேலதிகமாக விபரிக்கப்பட்டுள்ள 18, 33, 263, 277, 313 மற்றும் 326 ஆகிய இலக்க முறிகள் மூலம் செலான் வங்கி பீ. எல். சீ. தாபனத்திற்கு ஈடு வைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும், சொல்லப்பட்ட முப்பத்து ஏழு கோடியே எழுபத்து ஏழு இலட்சத்து எழுபத்து ஆறாயிரத்து நூற்று அறுபத்து மூன்று ரூபா ஐம்பத்து ஒரு சதம் (ரூபா 377,776,163.51) கொண்ட பணத்தொகையுடன் 2014, ஒற்றோபர் 01 ஆந் திகதி முதல் விற்பனை நாள் வரையிலான வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் சொல்லப்பட்ட சட்டத்தின் பிரிவு 13 இன் கீழ் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) முழுத்தொகையையும் அறவிடுவதற்காக, உரிமம் பெற்ற ஏல விற்பனையாளர் திருமதி சந்திமா கமகேயினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.” .

### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம் மற்றும் கொழும்பு மாநகர சபையின் எல்லைக்கு உட்பட்ட காலி வீதி, கொள்ளுப்பிட்டி (பிரிவு இலக்கம் 37) வரிமதிப்பீட்டிலக்கம் 134/1 ஐ கொண்டுள்ளது. உரிமம் பெற்ற நில அளவையாளர் எல். ஈ. எஸ். வெண்ட வாலினால் தயாரிக்கப்பட்ட 1970, சனவரி 31 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இலக்கம் 236 இல் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு 1 என அடையாளம் இடப்பட்ட பகிரப்பட்ட காணியின் பகுதியின் எல்லைகள் - வடக்கு: கொள்ளுப்பிட்டி வீதி (ஸ்ரூவேட்ஸ் என்ஜினியேர்ஸ்) வரிமதிப்பீட்டிலக்கங்கள் 116, 116/1, 120, 132 ஐ கொண்டுள்ள வளவுகள் ; கிழக்கு : காணித்துண்டுகள் 2 மற்றும் 3 ; தெற்கு: சிரில் டீ சேரத்தின் ‘த சியன்னகோகு’ ; மேற்கு: புகையிரத பாதை மற்றும் சொல்லப்பட்ட வரைபட இலக்கம் 236 இற்கு அமைவான முப்பத்து ஒன்று தசம் ஒன்று ஆறு பேர்ச் (0ஏ. 0றூ. 31.16பே.) விஸ்தீரண ஒதுக்கீடு.

மேற்படி காணி மீள் அளக்கப்பட்டு கீழ் வருமாறு விவரிக்கப் பட்டுள்ளது.

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம் மற்றும் கொழும்பு மாநகர சபையின் எல்லைக்கு உட்பட்ட கொள்ளுப்பிட்டி (பிரிவு இலக்கம் 37) இல் உள்ள கொள்ளுப்பிட்டி காலி வீதி, வரிமதிப்பீட்டிலக்கங்கள் 116 மற்றும் 134/1 ஐ கொண்டுள்ள, உரிமம் பெற்ற நில அளவையாளர் கே. பீ. சந்திரசேகரவினால் தயாரிக்கப்பட்ட 2006, செத்தெம்பர் 04 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இலக்கம் 1420A இல் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு 1 என அடையாளம் இடப்பட்ட ஆதனத்தின் பகுதி, (உரிமம் பெற்ற நில அளவையாளர் கே. பீ. சந்திரசேகரவினால் தயாரிக்கப்பட்ட 2004.08.10 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இலக்கம் 1365A இல் விபரமாக விளக்கப்பட்டுள்ள இணைக்கப்பட்ட காணித்துண்டு 1 மற்றும் முன் சொல்லப்பட்ட உரிமம் பெற்ற நில அளவையாளர் எல். ஈ. எஸ். வெண்ட வாலினால் தயாரிக்கப்பட்ட 1970.01.31 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இலக்கம் 236 இல் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு 1 இன் பகுதி) தற்போது வரைபட இலக்கம் 236 இல் உள்ள காணித்துண்டு 1 இன் சொல்லப்பட்ட பகுதியின் எல்லைகள் - வடக்கு: ரண்முத்து விருந்தகம், கொள்ளுப்பிட்டி, காலி வீதி வரிமதிப்பீட்டிலக்கம் 112 ஐ கொண்டுள்ள வளவுகள்; கிழக்கு : காலி வீதி மற்றும் வரைபட இலக்கம் 236 இல் உள்ள காணித்துண்டுகள் 2 மற்றும் 3 ; தெற்கு : வரைபட இலக்கம் 236 இல் உள்ள காணித்துண்டு 2, சிரில் டீ சேரத்தின் கொள்ளப்பிட்டி சியன்னகோகு, காலி வீதி வரிமதிப்பீட்டிலக்கம் 138 ஐ கொண்டுள்ள வளவுகள்; மேற்கு: இத்துடனான காணித்துண்டுகள் 3 மற்றும் 2 மற்றும் ஒரு ஏக்கர் இரண்டு றூட் மற்றும் இருபத்து நான்கு தசம் இரண்டு ஒன்பது பேர்ச் (1ஏ.2றூ.24.29பே.) அல்லது 0.66846 ஹெக்டேயர்கள் விஸ்தீரணத்துடனான சொல்லப்பட்ட வரைபட இலக்கம் 1420A இற்கு அமைவாக உள்ள எல்லாவற்றையும் கொண்டது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

(திருமதி) வி. ஏ. பரணகம,
சட்டத்தரணி,
சட்டத்துறை தலைவர்.

6-151

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.